**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை

**2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02 ம் நாள்**

**அ.வ.எண்.81/2025**

**TNCB-13000082-2025**

சுமதி --- வாதி

/ எதிர் /

1) திரு. வட்டாட்சிர் அவர்கள், பொள்ளாச்சி

2) தமிழ்நாடு அரசு அதற்காக அதன்

மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், கோயமுத்தூர் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கனாது, கடந்த 07.04.2025 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 15.04.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.02.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.S.ஜெலஸ்டின் சேவியர் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

கடந்த 23.11.2002 தேதியில் பொள்ளாச்சி வட்டம். ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி. கதவு இலக்கம் 36 ல் இறந்து போன முத்துச்சாமி த/பெ குமாரச்சாமி என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்**:

வாதி தாயார் கண்ணம்மாளும், இறந்து போன முத்துசாமியும் உடன்பிறந்த சகோதரரும், சகோதரியும் ஆவார்கள். வாதிக்கு மேற்கண்ட முத்துசாமி அவர்கள் தாய்மாமா ஆவர். கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி, கதவிலக்கம் 36 ல் வசித்து வந்த லேட். குமாரசாமி மகன் முத்துசாமி என்பவர் கடந்த 23.11.2002 ம் தேதி மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டில் காலமாகிவிட்டார். அவரது மனைவி சரஸ்வதி என்பவர் கடந்த 19.10.2019 ம் தேதியன்று காலமாகிவிட்டார். மேற்படி முத்துசாமி-சரஸ்வதி தம்பதியர்களுக்கு குழந்தைகள் இல்லை. முத்துசாமியின் பெற்றோர்களும் நீண்ட காலத்திற்கு முன்பே இறந்துவிட்டார்கள். வாதி தாயார் கண்ணம்மாள் 10.01.1983 ம் தேதி இறந்துவிட்டார். எனவே இறந்து போன முத்துசாமி அவர்களுக்கு இரண்டாம் நிலை வாரிசாக வாதி தான் சட்டபூர்மான வாரிசு ஆவார்.

(2.2) மேற்படி இறந்து போன முத்துசாமியின் உடன்பிறந்த சகோதரியும், வாதி தாயாருமான கண்ணம்மாள் வாதிக்கு சிறு வயதாக இருக்கும் போதே இறந்துவிட்டார். அதன்பின்பு மேற்படி முத்துசாமிக்கு குழந்தைகள் இல்லாததாலும், வாதிக்கு தாயார்

இல்லாததாலும் வாதியை தன்னுடனேயே வைத்து தனது மகளை போல அவர் இறக்கும் வரை பராமரித்து வந்தார். அதனால் இறந்து போன முத்துசாமி அவர்களின் வாரிசு சான்று வேண்டி வாதி 1ம் பிரதிவாதியிடம் மனுச் செய்ததில் "முத்துசாமி என்பவருக்கு நேரடி வாரிசுகள் யாருமில்லாததால் நீதிமன்றத்தினை அணுகி உரிய பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது" என்று கூறி 08.07.2021ம் தேதியன்று 1ம் பிரதிவாதி கடித குறிப்பு வழங்கியுள்ளார். 1ம் பிரதிவாதி வழக்கிய குறிப்பின்படி வாதி உடனடியாக சமூகம் நீதிமன்றத்தில் வாரிசு சான்று கோரி தாவா தாக்கல் செய்ய முடியாமல் தற்போது தான் தாவா தாக்கல் செய்ய வாதி மேற்படி முத்துச்சாமியின் வாரிசு சான்று கோரி மீண்டும் கடந்த 08.02.2025ம் தேதி 1ம் பிரதிவாதியிடம் ஆன்லைன் மூலம் மனுச் செய்ததில் "மனுதாரர் இறந்தவருக்கு நேரடி வாரிசு இல்லை என்றும் மேலும் வட்டாட்சியர் அவர்களால் நீதிமன்றத்தில் வாரிசு சான்று பெற்றுக் கொள்ளுமாறு ஏற்கனவே உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக கூறி 15.03.2025ம் தேதியன்று 1ம் பிரதிவாதி வாதி கொடுத்த மனுவினை நிராகரித்துவிட்டார்.

(2.3) முத்துசாமி அவர்களின் பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்து பட்டா மாறுதல் செய்யவும் மற்றும் இதர காரியங்களுக்காகவும் முத்துசாமி அவர்களின் வாரிசு சான்று தேவைப்படுகிறது. அதனால் வாதி உரிய பரிகாரங்கள் கோரி தாவா தாக்கல் செய்துள்ளார். ஆகவே சமூகம் கோர்ட்டாரவர்கள் கிருபை செய்து, கடந்த 23.11.2002ம் தேதி பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி, கதவிலக்கம் 36 ல் இறந்துவிட்ட லேட். குமாரசாமி மகன் முத்துசாமி என்பவருக்கு வாதி மட்டும் தான் சட்டப்படியான வாரிசு என்று ஒரு விளம்புகை பரிகாரம் வழங்கியும், இன்னும் சமூகம் கோர்ட்டாரவர்களுக்கு தக்கதெனக்

கருதும் இதர பரிகாரங்கள் வழங்கியும் உத்திரவிட வேண்டுமாயும் பிரார்த்திக்கிறார்.

3) **பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையின் சுருக்கம்** :

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும். நியாயப்படியும் நிலைத்தக்கது அல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவைகளைத் தவிர மற்றவற்றை இந்த பிரதிவாதி மறுக்கிறார். மறுக்கும் அந்த சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். வாதியின் தாயார் கண்ணம்மாளும், இறந்து போன முத்துசாமியும் உடன்பிறந்த சகோதரரும், சகோதரியும் ஆவார் என்றும், மேற்படி முத்துசாமி வாதியின் தாய்மாமா என்றும், கடந்த 23.11.2002-ல் பொள்ளாச்சி தாலூக்கா, ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன்வீதி-2, கதவு எண்.36-ல் மேற்படி முத்துசாமி வசித்து வந்து அங்கு இறந்து விட்டார் என்றும், அவரது மனைவி சரஸ்வதி கடந்த 10.01.1983 ல் இறந்து விட் டார் என்றும் கூறியுள்ளதை வாதியே நிரூபிக்க வேண்டும்.

(3.2) மேற்படி இறந்துபோன முத்துசாமியின் உடன்பிறந்த சகோதரியும், வாதியின் தாயாருமான கண்ணம்மாள் வாதிக்கு சிறு வயதாக இருக்கும் போதோ இறந்து விட்டார் என்றும். மேற்படி முத்துசாமி-சரஸ்வதி தம்பதியருக்கு குழந்தைகள் இல்லாததாலும், வாதிக்கு அவரது தாயார் இல்லாததாலும் வாதியை தன்னுடனேயே வைத்து தனது மகளை போல அவர் இறக்கும் வரை பராமரித்து வந்தார் என்றும் கூறியுள்ளதை வாதியே நிரூபிக்க வேண்டும். மேற்படி இறந்து போன முத்துசாமியின் பெற்றோர்கள் பற்றிய விவரம். தாவாவில் குறிப்பிடவில்லை. மேற்படி காலமான முத்துசாமியின் பெயரில் உள்ள சொத்துக்கள் பட்டா பெயர் மாறுதல் செய்யவும் இதர காரியங்களுக்காகவும் அவரது வாரிசு சான்றிதழ்

தேவைப்படுவதால், 1-ம்வாதி, 1ம் பிரதிவாதியிடம் விண்ணப்பித்த போது, மேற்படி விண்ணப்பத்தை பரிசீலனை செய்த 1 ம் பிரதிவாதி முத்துசாமி என்பவருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாததால் தகுந்த நீதிமன்றம் மூலம் பரிகாரம் பெற்றுக் கொள்ளுமாறு மனுவை நிராகரித்துள்ளார். இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் தவறானது. இந்த பிரதிவாதி தேவைப்பட்டால் கூடுதல் பிரதிவாதம் தாக்கல் செய்யும் உரிமையை இதன் மூலம் ரிசர்வ் செய்து கொள்கின்றார். சமூகம் கோர்ட்டாரவர்கள் வாதிகளின் வழக்கினை இந்த பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமாய் இந்த பிரதிவாதி பிரார்த்திக்கின்றார்

**4) <u>வழக்கெழுவினாக்கள்</u> :**

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இரு தரப்பும் கேட்கப்பட்டு, இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiffs alone is the legal heirs of the deceased Muthusamy ? |
| 2 | Whether the plaintiffs is entitled for the relief of declaration as prayed for ? |
| 2. | To what other relief? |

**5) <u>சாட்சிகள்</u> :**

வாதி தரப்பில், வாதி சுமதி தன்னை **வா.சா.1** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் நபர் சுந்தராஜ் வாதி தரப்பில் **வா.சா.2** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி ஆவண சாட்சியங்கள் இல்லை.

6) <u>எழுவினா 1-2 ற்கான தீர்வு:</u>

வாதி அவரது தாய்மாமா முத்துச்சாமி இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதை வாதி நிரூபித்துள்ளார்களா என்று காண்கையில் இந்த வாதியின் தாய் கண்ணம்மாளும் இறந்துபோன முத்துச்சாமியும் சகோதர சகோதரி ஆவார்கள். மேற்படி முத்துச்சாமி அவர்கள் கடந்த 23.11.2002 தேதியன்று ஜமீன்ஊத்துக்குளியில் வைத்து காலமாகிவிட்டார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.1** பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேற்படி இறந்துபோன முத்துச்சாமியின் சகோதரி கண்ணம்மாள் கடந்த 10.01.1983 ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.2** ஆவணங்களை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது.

(6.2) மேற்படி இறந்துபோன முத்துச்சாமியின் மனைவி சரஸ்வதி என்பவர் கடந்த 19.10.2019 ம் ஆண்டு இறந்துவிட்டார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.3** ஆவணத்தை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேற்படி முத்துச்சாமிக்கும் சரஸ்வதிக்கும் குழந்தைகள் எதுவும் இல்லை என்பதும் அதனால் அவர்களின் சகோதரி மகளான வாதி மட்டுமே இறந்துபோன முத்துச்சாமிக்கு சட்டப்படியான இரண்டாம நிலை வாரிசு என வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.2 சாட்சியத்தில் இருந்து உறுதியாகிறது- மேற்படி முத்துச்சாமியின் பெயரில் உள்ள சொத்துக்களை பொறுத்து பெயர் மாற்றம் செய்வதற்காக 1ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி சரஸ்வதி கடந்த 08.07.2021ம் தேதியன்று மனு கொடுத்த பொழுது முத்துச்சாமி தம்பதியனருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லாத பட்சத்தில் வாரிசு சான்று வழங்க

மனுதாரரை நீதிமன்றத்தில் அணுக அறிவுறுத்தி குறிப்பாணை வழங்கியுள்ளார்கள் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.4** ஆவணங்களை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது.

(6.3) மேற்படி ஆவணத்திலேயே காலம் சென்ற முத்துச்சாமி மற்றும் சரஸ்வதிக்கு குழந்தைகள் யாரும் இல்லை அவரது பெற்றோர்களும் நீண்ட காலத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டார்கள் என்பது மேற்படி ஆவணத்தில் இருந்து உறுதியாகிறது. மேலும் இந்த வாதி இறந்துபோன முத்துச்சாமியின் வாரிசு இல்லை என்று இந்த பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் நேரடி வாரிசுகள் இல்லை என்று கூறி குறிப்பாணை வழங்கியதில் இருந்தே வாதி தான் இறந்துபோன முத்துச்சாமியின் இரண்டாம் நிலை வாரிசு என்பது உறுதியாகிறது. வாதி தரப்பை உறுதிபடுத்தும் விதமாக 3ம் நபர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் வாதி தரப்பை மேலும் வலுப்படுத்தி சாட்சியமளித்துள்ளார். மேற்படி வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதி இறந்துபோன முத்துச்சாமியின் சட்டப்படியான இரண்டாம் நிலை வாரிசு என்பது உறுதியாகிறது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களுக்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

**7) <u>எழுவினா 2 ற்கான தீர்வு</u>:**

மேற்கண்ட எழுவினாவிற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறெந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது-

**<u>முடிவில்,</u> கடந்த 23.11.2002 தேதியில் பொள்ளாச்சி வட்டம். ஜமீன் ஊத்துக்குளி கிராமம், குமரன் வீதி. கதவு இலக்கம் 36ல் இறந்து போன முத்துச்சாமி த/பெ குமாரச்சாமி என்பவருக்கு இந்த வாதி மட்டுமே சட்டப்பூர்வமான இரண்டாம் நிலை வாரிசு என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில், என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.12 18:49:42 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>** :

வா.சா.1. சுமதி (வாதி)

வா.சா.2 சுந்தராஜ் (3 ம் நபர்)

**<u>வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05.02.2019 | முத்துசாமி இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 30.12.2019 | கண்ணம்மாள் இறப்பு சான்று (அசலுடன் ஒப்பீடு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டது ) - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 05.11.2019 | சரஸ்வதி இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 08.07.2021 | 10 ம் பிரதிவாதி வழங்கிய கடித குறிப்பு - அசல் |
| வா.சா.ஆ.5 | 15.03.2025 | 1 ம் பிரதிவாதி வழங்கிய குறிப்பாணை ஆன் லைன் நகல் |
| வா.சா.ஆ.6 | | சுமதி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| வா.சா.ஆ.7 | 15.03.2025 | முத்துசாமி பெயரில் உள்ள ஆன் லைன் பட்டா - இணையவழி நகல் |
| வா.சா.ஆ.8 | - | வா.சா.2 ன் ஆதார் அட்டை - ஒளி நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு ஒப்பீடு செய்யப்படுகிறது - நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்</u> :**

– இல்லை -

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.12 18:49:48 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

----------------------------------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.81/2025

நாள் : 16.03.2026

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**

**பொள்ளாச்சி.**

----------------------------------------------------------